## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு

## Uni5 பக்த விஜயம் - 60. ஸ்ரீமான் த்வாரகா ராம்தாஸ்

---

த்வாரகைக்கு அருகில் வாழ்ந்தவர் இவர். மிகவும் ஆழ்ந்த பக்தியும் விவேகமும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்.மிகவும் எளிய உண்மையான வாழ்க்கையை வாழ்ந்தவர்.பக்திக்கு விக்ரஹ ஆராதனை எவ்வளவு இன்றியமையாதது என்று இவர் உணர்ந்தவர்.அதையே மக்களுக்கும் போதித்தார்.

ஸ்ரீமத் பாகவதத்தை எளிய முறையில் மக்கள் மத்தியில் ப்ரச்சாரம் செய்வர் இவர்.தான் ஆராதனை செய்யும் விக்ரஹமும் தன்னுள் இருக்கும் சத்யமும் ஒன்றே என்பதை உணர்பவர்.வருதம் தோறும் பொருள் சேர்த்து; ஆடி மாத ஏகாதசிக்கு த்வாரகை செல்வார்.மிகப் பெரிய துளசி தள மாலையை சமர்ப்பிப்பார், தன் பொருள் கொண்டு அன்னதானம் செய்வார்.

இவரது பக்தியை ஊரார் புகழ்வர்.காலம் செல்கிறது.இவருக்கும் வயதானது. மிகவும் தளர்ந்த நிலையில் தன் மனைவியுடன் ஒரு முறை த்வாரகை சென்றார். ஆழ்ந்த பாவ பக்தியில் லயித்து இருக்கும் போது, அவரது மனைவி த்யானிக்கிறார், "ஹே த்வாரகாதீசா! ருக்மிணி ப்ராண நாதா! ஸ்ரீராதையின் உயிரே! அடுத்த வருடம் எங்களால் வரமுடியுமா தெரியாதே! வயோதிகத்தில் தளர்ந்தோம்."

"அன்பரே! என்னை பக்தியால் இழுங்கள் நான் வருகிறேன்!" - கண்ணன்

"உன்னை அழைத்துச் சென்றால், கோயிலில் நீ இல்லாமல் என்ன ஆகும்?" - மனைவி

"அதைப் பற்றிக் கவலை இல்லை!" - ஈசன்

இறைவனின் சானித்யத்தை முழுக்க முழுக்க இவர்கள் தங்கள் மெய்யுணர்வில் தேக்கித் தங்கள் ஊருக்கு இட்டுச் சென்று அவ்வூரில் ஒரு க்ருஷ்ண விக்ரஹத்தில் ப்ரதிஷ்டை செய்தனர்.இதை த்வாரகா பூஜாரிகள் உணர்ந்து, ராமதாஸரின் பாதங்களில் வீழ்ந்து வணங்க அவர் energy concept பற்றி விளக்கம் தருகிறார்.யாராலும் எவராலும் தெய்வீக சக்தியைத் தனித்துக் கொண்டாட முடியாது! பக்தியின் மேலீட்டால் தெய்வீக சக்தியை மனிதன் தன்னுள் நுகர முடியும் என்றும் விளக்கினார்.இவரது விளக்கம் புரிந்த பூஜாரிகள் மிக்க ஸ்ரத்தையுடன் மேலும் தங்கள் பணியை த்ராவரகையில் செய்தனர்.

ராமதாஸரும் மனைவியும் விக்ரஹ ஆராதனை மூலம் தூய இன்பத்தை நுகர்ந்து இறைவன் அடி சேர்ந்தனர்.

ஹரி ஓம்!